**செய்தி வெளியீடு எண்: 596** **நாள்: 31.08.2018**

**<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (31.08.2018) சேலத்தில் நடைபெற்ற விழாவில் ஆற்றிய உரை:</u>**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு மாணவச் செல்வங்களுக்கு பல்வேறு திட்டங்களை வகுத்து அளித்ததன் மூலமாக இன்றைக்கு இந்தியாவிலேயே கல்வித்தரம் தமிழகத்தில் உயர்ந்து காணப்படுகின்றது. கல்வி கற்பவர்களின் எண்ணிக்கை இன்றைக்கு உயர்ந்திருக்கிறது. இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கண்ட கனவை அம்மாவினுடைய அரசு நனவாக்கிக் கொண்டிருக்கிறது. இந்தியாவிலேயே அதிக அளவு கல்வி கற்கக்கூடியவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதற்குக் காரணம், அதிகமான ஆரம்பப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் என்று அந்தந்தப் பகுதிகளில் இருக்கின்ற மாணவ, மாணவியர் அங்கேயே கல்வி கற்கக்கூடிய சூழ்நிலையை இன்றைக்கு அம்மாவினுடைய அரசு உருவாக்கித் தந்ததுதான். அதற்காக புதிய, புதிய பள்ளிகளை திறந்திருக்கின்றோம். அதேபோல, மாணவச் செல்வங்கள் சிறந்த கல்வி கற்க வேண்டுமென்பதற்காக அம்மாவினுடைய அரசு மாணவர்களுக்கு காலணி, சீருடை, நோட்டு, புத்தகம், சைக்கிள், அறிவுப்பூர்வமாக கல்வி கற்பதற்கு மடிக்கணினி, S.S.L.C., +1, +2 படித்தால் ஊக்கத் தொகை போன்ற பல்வேறு அடிப்படை வசதிகள் செய்து கொடுத்து, அவர்களை ஊக்கப்படுத்தி, கல்வியில் சிறந்த மாநிலமாக இன்றைக்கு தமிழ்நாடு திகழ்கின்றது. இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் கொண்டு வந்த அத்தனை திட்டங்களும் இன்றைக்கு மாணவச் செல்வங்களுக்கு கிடைத்துக் கொண்டிருக்கின்றது என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, மாணவச் செல்வங்களுக்குத் தேவையான பள்ளிக் கட்டடங்கள், கூடுதல் கட்டடங்கள், விளையாட்டு மைதானம், கழிவறை வசதி, குடிநீர் வசதி என அனைத்து வசதிகளையும் அனைத்து பள்ளிகளிலும் அம்மாவினுடைய அரசு செய்து கொடுத்திருக்கின்றது. தனியார் பள்ளிகளுக்கு இணையான அனைத்து வசதிகளும் அரசு பள்ளிகளில் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றது என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். அரசுப் பள்ளிகளில் படித்தால், உயர்கல்வி, தொழிற்கல்வி ஆகியவற்றிற்குச் செல்ல முடியாது என்ற நிலையை மாற்றி, உயர்கல்வி, தொழிற்கல்வி படிக்க முடியும் என்ற சூழ்நிலையை உருவாக்கித் தந்த அரசு அம்மாவினுடைய அரசு. சாதாரண

குடும்த்தில் பிறந்த மாணவ, மாணவியர்கூட உயர்கல்வி கற்கக்கூடிய சூழ்நிலை இன்றைக்கு உருவாகியிருக்கிறது.

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வாழ்ந்த காலத்தில் 65 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை துவக்கினார்கள். அதைத் தொடர்ந்து அம்மாவினுடைய மறைவிற்குப் பிறகு அம்மாவினுடைய அரசால் 11 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் கடந்த ஆண்டு துவங்கப்பட்டு, அதன் மூலமாக ஆங்காங்கே இருக்கின்ற ஏழை, எளிய குடும்பத்தைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் உயர்கல்வி படிக்கக்கூடிய சூழ்நிலை உருவாக்கித் தரப்பட்டுள்ளது. அம்மா வழியில் செயல்படும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, இதுவரை 76 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை தமிழக மாணவ, மாணவிகளுக்குக் கொடுத்து அதன் மூலமாக ஆயிரக்கணக்கானவர்கள் உயர்கல்வி படிக்கக்கூடிய சூழ்நிலை உருவாக்கித் தரப்பட்டுள்ளது. இந்த ஆண்டுகூட கல்லூரிகளில், கூடுதலாக 20 சதவிகிதம் மாணவர்கள் சேர்க்கை நடைபெற்றிருக்கிறது. ஒரு நாட்டினுடைய உயரிய வளர்ச்சி கல்வியைப் பொறுத்துத்தான் இருக்கிறது. எந்தவொரு மாநிலம், எந்தவொரு நாட்டிலே கல்வி வளர்ச்சி அதிகம் இருக்கின்றதோ, அங்கு பொருளாதாரம் உயரும், அமைதி நிலவும், பண்பு நிலவும். அப்படிப்பட்ட கல்வியை அம்மாவினுடைய அரசு தொடர்ந்து மாணவச் செல்வங்களுக்கு வழங்கி வருகிறது. கல்வி கற்றவருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு என்று சொல்வார்கள். வாழ்நாள் முழுவதும் நம்மோடு இருக்கின்ற ஒரே செல்வம் கல்விச் செல்வம் மட்டும் தான். செல்வத்துள் செல்வம் சிறந்த செல்வம் கல்விச் செல்வம். அப்படிப்பட்ட கல்விச் செல்வத்தை இளம்பருவத்திலே மாணவ, மாணவியர் தங்களுடைய கடமையை உணர்ந்து, பெற்றோருடைய நிலைமையை உணர்ந்து, சிறப்பான முறையிலே படித்து உயர்வடைய வேண்டுமென்று இந்த நன்னாளிலே உங்களையெல்லாம் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு கல்வி என்பதை சிறு வயதில் தான் கற்க முடியும். மாணவப் பருவத்தில்தான் கற்க முடியும். இளம்பருவத்தில் கிடைக்கக்கூடிய ஒரே செல்வம் கல்விச் செல்வம். அரசைப் பொறுத்தவரைக்கும் மாணவச் செல்வங்களுக்கு ஏராளமான வசதிகளை வழங்கிக் கொண்டிருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் வாழ்ந்த காலத்திலும் சரி, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வாழ்ந்த காலத்திலும் சரி, அம்மாவினுடைய மறைவிற்குப் பிறகு அம்மாவினுடைய அரசு மாணவ, மாணவியர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர வேண்டும், கல்வி சிறக்க வேண்டுமென்பதற்காக பல்வேறு திட்டங்களை தொடர்ந்து வழங்கிக் கொண்டிருக்கின்றது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள கடமைப் பட்டிருக்கின்றேன்.

சேலம் மாநகரத்திலே ஏற்கனவே பிளாஸ்டிக் பொருள் தடை செய்யப்பட்டுள்ளது. மாவட்டம் முழுவதும் ஒருமுறை உபயோகப்படுத்தக்கூடிய பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்தக்கூடாது என்பதற்காக அம்மாவினுடைய அரசு ஆணை பிறப்பித்திருக்கின்றது. இது ஜனவரி, 2019 முதல் அமலுக்கு வருகின்றது. இப்பொழுதே நம்முடைய மாநகராட்சியைச் சேர்ந்த ஆணையாளர்கள், சேலம் மாநகரத்திலே ஒருமுறை உபயோகப்படுத்தக்கூடிய பிளாஸ்டிக் பொருட்களை தடை செய்யக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். அதற்காக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

சேலம் நகராட்சி 1886–ஆம் ஆண்டு நகராட்சியாக துவக்கி வைக்கப்பட்டது. சேலம் நகராட்சியின் முதல் கூட்டம் அப்போதைய ஆங்கிலேய கலெக்டர் அர்பத்நட் தலைமையில் நடந்தது. நகராட்சியின் முதல் தலைவராக கலெக்டர் அர்பத்நட் இருந்தார். அப்போது சேலம் நகராட்சி ஒன்பது வார்டுகளை மட்டுமே கொண்டிருந்தது. இப்பொழுது 60 வார்டு இருக்கின்றது. சேலம் நகராட்சி படிப்படியாக விரிவடைந்து பெரிய நகராட்சியாக மாறியது. 1972ல் முதல் தேதியன்று சேலம் சிறப்பு நிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டது. சேலம் நகராட்சி 44 வார்டுகளாக பிரிக்கப்பட்டது.

நகராட்சியாக இருந்த சேலம் 1994 ஜுன் முதல் தேதியன்று மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. அதன்படி சேலம் மாநகராட்சியின் வார்டுகள் 60 ஆக உயர்ந்தது. சேலம் மாநகராட்சியின் கீழ் ஏழு மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிகள், மூன்று மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகள், ஒன்பது நகராட்சி நடுநிலைப் பள்ளிகள் 41 நகராட்சி துவக்கப் பள்ளிகள் 60 மாநகராட்சி சத்துணவு மையங்கள் இயங்குகின்றன.

சேலம் மாநகராட்சியின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய சேலம்–மேட்டூர் பழைய குடிநீர் திட்டம் மூலம் 1 கோடியே 20 லட்சம் லிட்டர் குடிநீரும், மேட்டூர் ஆத்தூர் குடிநீர் திட்டம் மூலம் 8 கோடி லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டுகிறது.

சேலம் மாநகராட்சி சேலம் நகர மக்களின் நலனுக்காக பல்வேறு நலத்திட்டங்கள் மற்றும் சேலம் நகரத்தை அனைத்து வகையிலும் முதன்மை நகரமாக உருவாக்க பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

சேலம் மாநகராட்சிக்கு உட்பட்ட 4 மண்டலங்களில் சூரமங்கலம் மண்டலத்தில் தர்மா நகர், கீழ்மேம்பாலம் நகர், அபிராமி கார்டன், அஸ்தம்பட்டி மண்டலத்தில் பிரகாசம் நகர், பரமன் நகர், குறிஞ்சி நகர், கம்பர் தெரு, அம்மாபேட்டை மண்டலத்திலுள்ள அய்யாசாமி பார்க், கொண்டலாம்பட்டி மண்டலத்திலுள்ள அபிராமி கார்டன் ஆகிய 9 இடங்களில் 4 கோடியே 11 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள பசுமை வெளி பூங்காக்களை நான் இன்று சேலம் நகரத்து

மக்களின் பயன்பாட்டிற்காக துவக்கியுள்ளேன் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்தத் தருணத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் பூங்காக்களில் மூத்த குடிமக்கள் மற்றும் பொதுமக்கள் நடை பயிற்சி செய்ய ஏதுவாக நடைபாதைகள், 8 வடிவிலான நடைபயிற்சி மேடைகள், தியான மண்டபம், மூலிகை பண்ணைகள், இறகு பந்து, கூடைப் பந்து விளையாட்டு திடல்கள், உடற்பயிற்சி கூடங்கள், குழந்தைகளை கவரும் வண்ண ஓவியங்கள், குழந்தைகளுக்கான விளையாட்டு உபகரணங்கள், வண்ண ஒளி விளக்குகள் மற்றும் குடிநீர் உள்ளிட்ட பிற அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்பதை மிகுந்த மனநிறைவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

வரும் ஜனவரி 1 முதல் பிளாஸ்டிக் தமிழ்நாட்டில் முழுவதுமாக தடை செய்யப்படும் என்ற அரசின் அறிவிப்பிற்கிணங்க, சேலம் மாநகராட்சி,அதன் எல்லைக்குட்பட்ட பாரத ரத்னா புரட்சித் தலைவர் எம்.ஜிஆர் மத்திய பேருந்து நிலையம் மற்றும் பழைய பேருந்து நிலையங்களில் உள்ள கடைகளில் ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் தண்ணீர் பாக்கெட்டுகள் விற்பனையும் அதனது பயன்பாட்டிற்கு 1.8.2018 முதல் தடை விதித்து ஆணை பிறப்பித்து இன்றைக்கு அது நடைமுறைப்படுத்த இருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாநகராட்சியினுடைய வளர்ச்சிக்கு, செயல்பாட்டிற்கு ஆணிவேராக இருப்பவர்கள் மாநகராட்சி ஊழியர்கள். அவர்கள் நலமுடன் வாழ்ந்து பணிகளை செம்மையாக ஆற்றுவதற்காக,அவர்களுக்கு மாநகராட்சியின் மூலம் மருத்துவ முகாம் நடத்தப்பட்டு வருகிறது.

சேலம் மாவட்டம் இன்று பல்வேறு துறைகளில் ஒரு முன்னோடி மாவட்டமாக திகழ்கிறது. கடந்த 8 ஆண்டுகளில் சேலம் மாவட்டத்தில் நிறைவேற்றப்பட்ட திட்டப்பணிகள் ஒரு சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

- ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்டத்தின் கீழ் 45 கோடியே 64 லட்சம் ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் 525 கோடியே 57 லட்சம் ரூபாய் மதிப்பிலான குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. இதன் மூலம் 18 ஆயிரத்து 21 பயனாளிகள் பயன் அடைந்துள்ளனர்.

- உள்ளாட்சி அமைப்பினால் 468 கோடியே 85 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 1494 பணிகள் எடுக்கப்பட்டு, 1235 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
- பொதுப்பணித்துறையின் மூலம் 251 கோடியே 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 344 பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.
- தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தின் சார்பில் 398 புதிய பேருந்துகள் விடப்பட்டுள்ளன.
- ஊரக வளர்ச்சி முகமையின் சார்பில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு திட்டங்கள் மூலம் 3 லட்சத்து 14 ஆயிரத்து 417 பணிகள் 1 ஆயிரத்து 388 கோடியே 58 லட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளன.
- தமிழ்நாடு ஊரக சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்மூலம் 111 கோடி மதிப்பிலான 333 திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளது.
- நெடுஞ்சாலைத்துறை மூலம் 1 ஆயிரத்து88 கோடியே 59 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த உட்கட்டமைப்பு திட்டங்கள் மூலம் 944 பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.
- 73 ஆயிரத்து 796 சுய உதவிக் குழுக்களுக்கு வங்கியுடன் இணைப்பு திட்டத்தின் மூலம் 1874 கோடி வங்கிக் கடன் கொடுக்கப்பட்டுள்ளது.

சுற்றுச் சூழலை காப்பாற்றுவதற்காக தமிழகத்திலே பிளாஸ்டிக் இல்லாத தமிழகமாக பாதுகாக்க தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதன் தொடர்ச்சியாக ஒருமுறை மட்டும் பயன்படுத்தக்கூடிய பிளாஸ்டிக் பொருட்களுக்கு 1.1.2019 முதல் தமிழகத்தில் தடை விதிக்கப்பட உள்ளது என்பதை நான் சட்டப்பேரவையில் அறிவித்தேன். தமிழகம் முழுவதும் மேற்கூறிய தடையை அமல்படுத்த தலைமைச் செயலாளர் தலைமையில் வழிகாட்டுக்குழு அமைக்கப்பட்டுள்ளது. மாவட்ட அளவில், மேற்கூறிய நோக்கத்தை செயல்படுத்தும் நோக்கில், மாவட்ட ஆட்சியாளர் தலைமையில் மாவட்டங்களில் குழு அமைக்கப்பட்டுள்ளது. தமிழக அரசாணையின்படி, ஒருமுறை பயன்படுத்திய பிளாஸ்டிக் தடை செய்யப்பட்டுள்ள பிளாஸ்டிக் பொருட்களை உற்பத்தி செய்தல், சேமித்தல், வாகனங்களில் எடுத்துச் செல்லுதல், விநியோகம், விற்பனை மற்றும் பயன்படுத்துவதை தடைவிதித்து உறுதிபடுத்தப்பட்டுள்ளது.

பிளாஸ்டிக் பொருட்களின் தீமைகள் பலவகை பிளாஸ்டிக் பொருட்களை உபயோகித்தால் சுற்றுச்சூழல் மாசு ஏற்படுவதாக பெரும்பாலும் அறியப்பட்டுள்ளது. ஒருமுறை பயன்படுத்தி தூக்கி

எறியப்படும் பிளாஸ்டிக், ஒவ்வொரு உபயோகப்படுத்தும் பிளாஸ்டிக் பொருளும் எந்த ஒரு மாற்றமும் இல்லாமல் நீண்டகாலம் பூமியில் நிலைத்து இருக்கிறது. பிளாஸ்டிக் பொருட்கள் உபயோகத்தினால் மரபணு பாதிக்கும் நிலை ஏற்படுத்துதல், நீர்நிலைகளை மாசுபடுத்துதல், நிலத்தடி நீர் நிலத்தில் ஊடுருவுவதையும் தடுக்கிறது. கீழ்க்கண்ட ஒருமுறை உபயோகப்படுத்தக்கூடிய பிளாஸ்டிக் பொருட்கள் தடை செய்யப்படுகின்றன.

பிளாஸ்டிக் பேப்பர்கள், பிளாஸ்டிக் மேசை விரிப்புகள், பிளாஸ்டிக் தட்டுகள், பிளாஸ்டிக் தடவப்பட்ட டம்ளர், பிளாஸ்டிக் டீ டம்ளர், பிளாஸ்டிக் கை–பைகள், பிளாஸ்டிக் தடவப்பட்ட கை–பைகள், பிளாஸ்டிக் தண்ணீர் பாக்கெட்டுகள் இவையெல்லாம் தடை செய்யப்பட்டிருக்கின்றன. அதற்கு பதிலாக, மாற்றாக பயன்படுத்தக்கூடிய பொருட்கள் வாழை இலை, தாமரை இலை, பாக்குமர இலையிலான தட்டுகள், கண்ணாடி, உலோகங்களிலான பொருட்கள், துணி, காகிதம், சணல் பைகள், காகித துணிப் பைகள், பீங்கான் பாத்திரங்கள், மண் கரண்டிகள் மற்றும் மண்பானைகள் ஆகியவைகளை பயன்படுத்தலாம். இங்கு நான் வருகின்றபொழுது, இந்த அரங்கிற்கு முன்பாக, அந்த பிளாஸ்டிக் பயன்படுத்துவதினால் என்னென்ன சுகாதாரக் கேடு விளைகிறது என்பதையெல்லாம் கண்காட்சியில் நாம் பார்த்தோம், அதற்கு மாற்றாக நாம் எதைஎதையெல்லாம் பயன்படுத்த வேண்டும் என்ற பொருட்களும் கண்காட்சியில் வைக்கப்பட்டிருக்கிறது. வந்திருக்கின்ற மாணவச் செல்வங்கள் இதையெல்லாம் பார்த்து, தங்களுடைய பெற்றோரிடத்தில் சொல்ல வேண்டும் என்று அன்போடு இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கின்றேன்.

விலக்கு அளிக்கப்படுகின்ற பொருட்கள், பிளாஸ்டிக் பாட்டில்கள், பிளாஸ்டிக் பேனர்கள், பால், தயிர், எண்ணெய் விற்கக்கூடிய பிளாஸ்டிக் பைகள், மருத்துவப் பொருட்களுக்கான உறைகள், பிளாஸ்டிக் கன்டெய்னர்.

அனைத்து அரசு அலுவலகங்களிலும் ஒருமுறை மட்டும் உபயோகப்படுத்தப்படும் பிளாஸ்டிக் பொருட்களை உடனடியாக தடை செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பான அறிவிப்பு பலகைகள் அனைத்து அலுவலகங்களிலும் பொதுமக்கள் அறியும்படியான இடங்களில் நிறுவுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சேலம் மாநகர் காவல் ஆணையரகத்தின் சார்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய சாலை பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த சில விளக்கங்களை அளிக்கிறேன். சாலை பாதுகாப்பு ரோந்துப் பணி என்பது தனியே செயல்படக்கூடிய அமைப்பாகும். சேலம் மாவட்டத்தில் பல பள்ளிகள் போக்குவரத்து நெரிசலான பாதையில் அமைந்துள்ளதால் ஒவ்வொரு பகுதியிலிருக்கும் போக்குவரத்துப் இடத்திலும் பணியில் இருக்கும் காவலர்கள் வைத்து போக்குவரத்தை

ஒழுங்குபடுத்துவது நடைமுறையில் சாத்தியப்படாததாகும். அந்தந்தப் பகுதிகளிலே சாலை பாதுகாப்பு ரோந்துப் பணிக்கு ஏற்படுத்தப்பட்ட அந்த பள்ளி மாணவ, மாணவிகள் உறுப்பினராக சேர்ந்து பயிற்சி பெற்று அவர்கள் மூலம் அந்தப் பகுதியில் போக்குவரத்தை ஒழுங்குபடுத்த வேண்டும். சாலை பாதுகாப்பு ரோந்துப் பணியை மாணவ, மாணவிகளை ஈடுபடுத்தும் முயற்சியாக 1957–ஆம் ஆண்டு துவங்கப்பட்டு, தொடர் வெற்றியினால் பல மாநிலங்களிலும் இந்தத் திட்டம் பின்பற்றப்பட்டது. சென்னையில் 1982–ஆம் ஆண்டு இத்தகைய பணி மேற்கொள்ளப்பட்டது. சேலம் மாநகரத்தில் ஒரு சில தனியார் பள்ளிகளில் மட்டுமே சாலை பாதுகாப்பு ரோந்து பணி அமைப்பு உள்ளது. தற்போது அனைத்து பள்ளிகளிலும் விரிவுபடுத்தும் விதமாக சேலம் மாநகரத்தில் சேலம் மாநகரத்தைச் சேர்ந்த 33 அரசுப் பள்ளிகள், 19 அரசு உதவி பெறும் பள்ளிகள், 44 அரசு மற்றும் தனியார் பள்ளிகளைச் சேர்ந்த 419 என மொத்தம் சாலை பாதுகாப்பிற்கு தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு சீருடை வழங்கப்பட்டுள்ளது. கடந்த 2017 சேலம் மாநகரில் 214 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த ஆண்டு இதுவரை 81 பேர் சாலை விபத்துக்களில் உயிரிழந்துள்ளனர். கடந்த வருடத்தைவிட இந்த வருடம், சாலை விபத்துக்களில் உயிரிழந்தவர்கள் குறைந்துள்ளது. சேலம் மாநகரத்தில் சாலை பாதுகாப்பு நிதியாக 1 கோடியே 15 லட்சத்து 30ஆயிரத்து 30 ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இந்த நிதியிலிருந்து சேலம் மாவட்டத்தில் விபத்துக்களை குறைக்கும் பொருட்டு, பல்வேறு உபகரணங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. சேலம் மாநகரத்தில் அடிக்கடி விபத்துக்கள் நடைபெறும் 30 இடங்கள் கண்டறியப்பட்டு, உரிய கவனம் செலுத்தி, அந்த இடங்களில், போக்குவரத்து தொழில்நுட்பத்தை அமலாக்கம் செய்து தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதன் காரணமாக, இன்றையதினம் விபத்துக்கள், கடந்த ஆண்டைவிட சரிபாதியாக குறைந்திருக்கிறது. சாலை பாதுகாப்பு ரோந்துப் பணியில் ஈடுபடும் மாணவ, மாணவியர்கள் சாலை விதிகளின்படி சாலை பாதுகாப்பு ஒழுங்குபடுத்தும் பணியை மேற்கொள்ள, சாலை விதிகளைப் பற்றி பயிற்சி அளிக்கப்பட்டு, சாலையை பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும். பள்ளிப் பருவத்திலேயே பொறுப்பான குடிமகனாக வருவதுடன், சாலை விதியை மதிக்கும் பழக்கம் ஏற்படும். எதிர்காலத்திலே, சாலை விபத்துக்கள் மேம்பாட்டுப் பணிகள் இருக்கும் என்பதை இந்தத் தருணத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

சில துறைகளின் வாயிலாக ஊரக வளர்ச்சித் துறை, வருவாய்த் துறை, வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, கூட்டுறவுத் துறை, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை ஆகிய துறைகளின் மூலம் 861 பயனாளிகளுக்கு பல்வேறு அரசு நலத்திட்டங்கள் 4 கோடியே 81 லட்சத்து 56 மதிப்பீட்டில்

பல்வேறு அரசு நலத்திட்டங்கள்இன்றையதினம், இந்த நிகழ்ச்சியின் வாயிலாக வழங்கப்படவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், பணியிலுள்ள சாலை பாதுகாப்பு ரோந்துக் குழுக்கள் 100 பள்ளிகளைச் சேர்ந்த 1500 மாணவ, மாணவியர்களுக்கு சாலை பாதுகாப்பு சீருடையை இன்றையதினம் வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சேலம் மாநகராட்சியில் பல்வேறு திட்டங்களை அம்மாவினுடைய அரசால் நிறைவேற்றப்படவுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன். ரூபாய் 165 கோடி மதிப்பீட்டில் பெரியார் பல்பொருள் அங்காடி மற்றும் ரூபாய் 150 கோடி மதிப்பீட்டில் சூரிய சக்தி மூலம் 30 மெகாவாட் மின்உற்பத்தி தயாரிக்கப்படும்.

ரூபாய் 117 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடைக் கழிவுநீர் குழாய்கள் அமைக்கின்ற பணிகள் துவங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ரூபாய் 92 கோடியே 13 இலட்சம் மதிப்பீட்டிலான பழைய பேருந்து நிலையம் அதிகளவில் இடம் கொண்ட பன்னாட்டுத் தரத்தில் மாற்றியமைக்கப்படும்.

ரூபாய் 86 கோடி மதிப்பீட்டில் நகர் முழுவதும் 24 மணிநேரமும் குடிநீர் விநியோகம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ரூபாய் 47 கோடி மதிப்பீட்டில் சீருந்து சாலைகள் அமைக்கப்படும்.

ரூபாய் 30 கோடி மதிப்பீட்டில் அம்மாப்பேட்டை பகுதியில் இரயில்வே மேம்பாலம் அமைக்கும் பணியும் துவங்கப்படும்.

ஆகவே அறிவிக்கப்பட்ட 75 திட்டப் பணிகள் ரூபாய் 1000 கோடி மதிப்பீட்டில் நம்முடைய சேலம் மாநகர் பகுதி உருவாக்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

சேலம் மாநகர மக்கள் பயன்படுத்துகின்றவிதத்திலே பசுமைப் பூங்கா இன்றைக்கு திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. அம்மாவினுடைய அரசு ஆங்காங்கே இருக்கின்ற மூத்த குடிமக்கள், பொதுமக்கள், சிறுவர்கள் பொழுதுபோக்குவதற்கும், நடைப்பயிற்சி செய்வதற்கும், உடற்பயிற்சி செய்வதற்கும் தேவையான அடிப்படை வசதியுடன் கூடிய பசுமைப் பூங்கா அம்மாவினுடைய அரசால் சேலம் மாநகரத்திலே உருவாக்கப்பட்டிருக்கிறது. சேலம் மாநகரம் முழுவதும் 12 பசுமை பூங்கா இன்று என்னால் திறக்கப்படுகின்றது. இதனுடைய மதிப்பு ரூபாய் 5 கோடியே 63 இலட்சத்து 46 ஆயிரம். சேலம் மாநகரம் வளர்ச்சி பெறுகின்ற மாவட்டமாக திகழ்கின்றது என்பதை பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2011–ல் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு சேலம் மாநகரம் எப்படி இருந்தது? 2011–க்குப் பிறகு சேலம் மாநகராட்சி எப்படி இருக்கிறது

என்பதை மக்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். கிட்டத்தட்ட ஏழரை ஆண்டு காலம் சேலம் மாநகராட்சியிலே பல்வேறு திட்டப்பணிகளை செயல்படுத்தி, மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை அம்மாவினுடைய அரசு செயல்படுத்தியிருக்கிறது. அதேபோல பல்வேறு சாலைகளை சீர் செய்திருக்கிறது. அதிகமான பாலங்கள் சேலம் மாநகரத்திலே கட்டப்பட்டு சேலம் மாநகரம் போக்குவரத்து நெரிசல் இல்லாத நகரமாக இன்றைக்கு உருவாக்கப்பட்டுள்ளது. இன்னும் 2 ஆண்டுகாலம் கழித்துப் பார்த்தால் சேலம் மாநகரம் தமிழகத்திலேயே ஒரு முன் மாநகரமாக திகழும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த தருணத்திலே தெரிவித்து, சேலம் மாநகரத்திலே வாழ்கின்ற மக்களுக்கு அனைத்து அடிப்படைத் தேவைகளையும் நிறைவேற்றித் தரும் அரசாக அம்மாவினுடைய அரசு திகழ்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, மாணவர்கள், உங்களுடைய பெற்றோர்கள் இருசக்கர வாகனத்தில் செல்லும்பொழுது ஹெல்மட் அணிந்து செல்ல வேண்டுமென்று நீங்கள் சொல்ல வேண்டும். விலைமதிக்க முடியாத உயிர் எந்தவிதத்திலும் பாதிக்கப்படக்கூடாது. அதை பாதுகாப்பது அனைவரது கடமை. இருசக்கர வாகனத்திலே செல்கின்ற நம்முடைய பெற்றோர்களை வலியுறுத்தி நீங்கள் கேட்டுக்கொள்ளவேண்டுமென்று இந்த நிகழ்ச்சியின் வாயிலாக கேட்டுக் கொண்டு, சிறப்பான ஏற்பாடு செய்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், மாநகராட்சி ஆணையாளர்களுக்கும் என்னுடைய நன்றியை தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி.

வணக்கம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**